இலங்கைப் பாராளுமன்றத்தின் அரச கணக்கு குழுவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119(4) தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற கூட்டத்தொடர் இலக்கம் - 79

மாவட்ட செயலகம் - ஹம்பாந்தோட்டை

முதலாம் பகுதி : 83.00

	அரச கணக்கு குழுவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்	கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்	தற்போதைய முன்னேற்றம்
01	அனுமதி பெறப்படாத பிடிப்புக்கள் தொடர்பான ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை.	பிரதேச செயலகங்களின் அனுமதி பெறப்படாத பிடிப்புக்கள் தொடர்பான ஆவணத்தை இற்றைப்படுத்தி பேணிச் செல்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.	ஏற்புடைய ஆவணங்கள் பிரதேச செயலகங்கள் மூலம் உரியவாறு பேணப்பட்டு வருகின்றன.
02	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வு ஐய வினாவுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படவில்லை.	ஒரு மாத காலத்திற்குள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்க முடியுமானவாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	பெரும்பாலான கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உரிய காலத்திற்குள் பதில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதனை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
03	உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்காக ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கை இடப்பட்டுள்ளது.	ஏற்புடைய பிரதேச செயலகங்கள் தொடர்பான கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்க முடியுமானவாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	பெரும்பாலான கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்கள் உரிய காலத்திற்குள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் துரித பதில்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
04	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் குறைந்த பட்சம் 4 கூட்டத் தொடர்களை நடாத்தவில்லை.	2022 ஆம் ஆண்டு நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக 03 மாவட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பிரதேச கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கள் அனைத்தும் உரியவாறு நடாத்தப்பட்டன.	எதிரிவரும் ஆண்டுக்காக உரியவாறு முகாமைத்துவக் குழுக்களை நடாதுவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

	அரச கணக்கு குழுவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்	கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்	தற்போதைய முன்னேற்றம்
05	அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை நிறம் தீட்டப்படவில்லை.	அரச இலட்சினைகளை நிறம் தீட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	ஒதுக்கு வாகனங்கள் அனைத்திலும் அரச இலட்சினைகள் நிறம் தீட்டி முடிக்கப்பட்டுள்ளது.
06	வாகனம் ஒன்று சேதமடைந்து 08 மாத காலத்திற்குள் அகற்றப்படவில்லை.	சேதமடைந்த வாகனங்களின் பதிவு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பதிவுச் சான்றிதழ்கள் இல்லாமை காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. ஏற்புடைய ஆரம்ப பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	சேதமடைந்த வாகனங்கள் தொடர்பில் சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் மதிப்பீட்டுக் குழுக்களை நியமித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
07	அரச வாகன விபத்துக்கள் தொடர்பில் நி.பி. பிரகாரம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.	தீர்க்கப்படாத வாகன விபத்து தொடர்பான பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விசாரணை குழுக்கள் நியமிக்கப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	காணப்பட்ட வாகன விபத்துக் கோப்புக்கள் தொடர்பில் நி.பி. பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு கோப்புக்கள் மூடப்பட்டன.
08	ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட காலம் முதல் இருந்து வரும் நிலுவைக் கடன் மீதிகள் காணப்பட்டன.	நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ள முடியுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.	நிலுவைக் கடன் மீதி தொடர்பில் இரண்டு நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 06 நபர்களிடம் கடன் நிலுவைகள் அறவிடப்பட்டு வருகிறது.
09	நி.பி.371 பிரகாரம் வெளியிடப்பட்ட குறித்த பணிக்கான இடைக்கால முற்பணப் பணிகள் நிறைவடைந்து 10 தினங்களுக்குள் தீர்க்கப்படவில்லை.	குறித்த பணிக்கான இடைக்கால முற்பணங்களைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு துரிதமாக கொடுப்பனவு மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.	குறித்த பணிக்கான இடைக்கால முற்பணங்களை தாமதமின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் பகுதி:68.00

	அரச கணக்கு குழுவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்	**கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**	**தற்போதைய முன்னேற்றம்**
01	மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.	செலவுகளைக் குறைக்கும் நோக்கில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது தலைவரின் பங்கேற்புடன் நடாத்தப்படுகிறது.	மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களை நடாத்துவதற்காக தலைவர் அவர்களால் திகதி வழங்குதல் இடம்பெறுவதால் அத் திகதிகளில் உரியவாறு குழுக்களை நடாத்துதல் இடம்பெற்றன. அதன் பிரகாரம் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான விதத்தில் ஆண்டின் போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளன.
02	1946 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மாவட்ட விவசாயக் குழுக்கள் நடாதப்படவில்லை.	ஆண்டில் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக 07 மாவட்ட விவசாயக் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளன. உரியவாறு மாவட்ட விவசாயக் குழுக்களை நடாத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.	தற்போது மாவட்ட விவசாயக் குழுக்கள் உரியவாறு நடாத்தப்படுகிறது.
03	மாவட்ட வீட்டுக் குழுக்கள் மாதாந்தம் கூட்டப்படவில்லை.	தற்போதைய அரச வீடுகளை பழுதுபார்ப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளின் பற்றாக்குறை மற்றும் வீடுகளுக்கான கோரிக்கை குறைவடைதல் காரணமாக தேவைக்கு ஏற்ப ஆண்டின் போது வீட்டுக் குழுக்கள் நடாத்தப்பட்டன.	உத்தியோகபூர்வ வீடுகளுக்கான கோரிக்கை பற்றிக் கருத்திற் கொண்டு தேவைக்கு ஏற்றவாறு வீட்டுக் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளன.

	அரச கணக்கு குழுவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்	கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்	தற்போதைய முன்னேற்றம்
04	மாவட்ட உரம் ஒருங்கிணைப்புக் குழு மாதாந்தம் கூட்டப்படவில்லை.	ஆண்டில் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக தேவைக்கு ஏற்றவாறு உரக் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளன.	உர நிவாரண உதவி முறை செயற்படாத காரணமாக உரக் குழுக்கள் பருவகாலத்தின் தேவைக்கு ஏற்ப நடாத்தப்படுகிறது.
05	இனம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான குறிகாட்டி விதிக்கப்படவில்லை	பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான குறிகாட்டியைத் தயார் செய்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.	பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான குறிகாட்டி தற்போது தயார் செய்யப்பட்டுள்ளது.
06	நிறுவனத்தின் பிரசைகள்/ சேவை பெறுநர் சாசனம் நடைமுறைப்படுத்தப்படல் தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கான முறையியல் தயாரிக்கப்படவில்லை.	பிரசைகள் சாசனத்தை தயாரிக்குமாறு அனைத்து அலுவலகங்களுக்கும் அறிவித்து தற்போது செய்படுத்தப்படுகிறது. மதிப்பீட்டுப் பணிகளுக்காக உத்தியோகத்தர்களை நியமித்து எர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.	சில அலுவலகங்கள் பிரசைகள் / சேவை பெறுநர் சாசனத்தை இற்றைபடுத்தி உள்ளது. மதிப்பீடுகளை மேற்கொண்டு தேவையான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
07	ஒட்டுமொத்த பணியாட்டொகுதி உள்ளடங்களாக செயலாற்றுகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை.	செயலாற்றுகை ஒப்பந்தங்களை 2023 ஆம் ஆண்டுக்காக தயாரிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	2024 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2023.11.30 ஆம் திகதி வெளியிடப்பட்டள்ள பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2/2018(1) ஆம் பந்தி மூலம் இது திருத்தப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல் இனிமேல் தேவை இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

	அரச கணக்கு குழுவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்	கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்	தற்போதைய முன்னேற்றம்
08	நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், கீழ் நிலையில்/ பொருத்தமற்ற நிலையில்/ பாதக நிலையில் காணப்பட்டது.	2022 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கீழ் நிலை அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளது.	எதிர் காலத்தில் தெளிவான அபிப்பிராயம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
09	மாவட்ட மற்றும் பிரதேச போதைப் பொருள் ஒழிப்பு குழுக் கூட்டங்கள் காலாண்டுக்கு ஒரு தடவை கூட்டப்படவில்லை.	போதைப் பொருள் ஒழிப்பு உத்தியோகத்தர்கள் மூலம் மாவட்ட போதைப் பொருள் ஒழிப்புக் குழுக்களை காலாண்டு ரீதியில் மற்றும் பிரதேச குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	தற்போது பிரதேச குழுக்கள் நடாத்தப்படுகிறது. மாவட்ட குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
10	2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்படவில்லை.	மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகு மூலம் அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	2023 ஆம் ஆண்டு 09 அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டுக்காக 07 அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளன.
11	திட்டமிடப்பட்ட பயிற்சிச் சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களின் அளவு 50% சதவீதத்தை விடவும் குறைவாக காணப்பட்டது	2022 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக எரிபொருள் மற்றும் போக்குவரத்து அசௌகரியங்கள் காரணமாக முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதற்காக மாவட்ட பயிற்சி அலகிற்கு அறிவித்து பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

	அரச கணக்கு குழுவினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்	கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்	தற்போதைய முன்னேற்றம்
12	கணக்காய்வாளர் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	பல பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.	பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் சாதனை மட்டத்தில் உள்ளது.
13	அரச கணக்குகள் குழுவின் பரிந்துரைகள்/ கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	இரண்டு விடயங்கள் மாத்திரம் எஞ்சியுள்ளன. நிலுவைக் கடன் மீதியை அறிவிடுதல் தொடர்பில் அடிக்கடி எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உத்தியோகபூர்வ வீடுகள் தொடர்பில் கணக்கு குழுவிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	நிலுவைக் கடன் மீதி தொடர்பில் சுற்றறிக்கை அறிவித்தல் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். உத்தியோகபூர்வ வீடுகள் பற்றிய தற்போதைய நிலைமை கணக்க குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
14	அனைத்து உத்தியோகத்தர்களாலும் சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய விபரம் சமர்ப்பிக்கப்படவில்லை.	சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய விபரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.	2024 ஆம் ஆண்டு அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய விபரத்தை சமர்ப்பித்துள்ளார்கள்.
15	மாவட்ட சுற்றாடல் குழு குறைந்த பட்சம் 02 தடவைகள் கூட்டப்படவில்லை.	சுற்றாடல் உத்தியோகத்தர்கள் ஊடாக சுற்றாடல் குழுக்களை நடாத்துவதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.	சுற்றாடல் குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

....
எச்.ஜீ.சுமனசேகர,
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,
ஹம்பந்தோட்டை நிர்வாக மாவட்டம்

H.G. Sumanasekara
District Secretary/Government Agent
Hambantota.

....
ஜானக அமரரத்ன,
பிரதான கணக்காளர்,
மாவட்ட செயலகம், ஹம்பாந்தோட்டை

Janaka Amararathna
Chief Accountant
District Secretariat
Hambantota.

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்